சநாதந தர்மம் --- சுத்த சன்மார்க்கம் – ஆய்வு கட்டுரை - APJ அருள்

ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஆவணங்கள் – ஆதாரங்கள் :

1. 1905 ம்ஆண்டு திரு ப. நாராயண அய்யர் எழுதிய சநாதநநூல் தமிழில்

2. வள்ளலாரின் விண்ணப்பங்கள், உபதேசங்கள் மற்றும் பாடல்கள்.

****************************************************************************************************

சநாதந தர்மம் : ( ஆதாரம் மேற்படி பார்வை 1 ) ::

ஆசிரியர் திரு ப. நாராயண அய்யர் அவர்களின் முன்னுரை குறிப்பு:-

“ ...நான்கு வேதங்கள் அடிப்படையில் ஆரிய இனத்திற்காக, ரிஷிகளால் வடிவமைக்கப்பட்ட நூலே சனாதன தர்மம் ஆகும்..”

“.....ஆரிய மதக் கொள்கைகள் தருமங்கள் இவைகளின் சாராம்சங்களை நம் வேத சாஸ்திர புராணாதிகளிருந்து எடுத்துத் தொகுத்து சனாதன தருமம் எனப்பெயரிட்டு ஆங்கில பாஷையில் ஓர் அருமையான நூல் வெளியிட்டார்கள்...”   அடுத்து;

பக்கம் : 1 ல்;

“..சுருதிகளை ஆதாரமாகக் கொண்ட சனாதன தருமம் அல்லது வைதிக தருமம் என்ற ஹிந்து சமயமானது .... “

பக்கம் : 3 ல் ;

“.. சனாதன தருமத்திற்கு முதல் நூல் யாவை எனில்; ஆரிய மதத்திற்கு முதல் நூல் நான்கு வேதங்கள் அடங்கிய சுருதியே ஆகும்...”

அதே பக்கத்தில்; “...ஆரிய ஜனங்களின் பிரயோஜனத்திற்காக ரிஷிகளால் வாக்கிய ரூபமாய் அமைக்கப் பட்டுள்ளன...”

அடுத்த பக்கத்தில்;

“..ரிஷிகள் தங்களால் நியமிக்கப்பட்ட மதத்தை எப்போதும் கவனமாக காப்பாற்றி வருகிறதும், ஒவ்வொரு யுகத்தின் அபெட்சைக்கும் யோக்கியதைக்கும் தக்கவாறு சுருதியை மறைத்தும், வெளிப்படுத்தியும் வருகிறார்கள். இப்போது நடை பெறுகின்ற சுருதிகளில் மந்திரங்களின் கணக்கையும் முன்னிருந்த்ததாகத் தெரியவருகிற மந்திரங்களின் கணக்கையும் ஒப்பிடுங்கால் எவ்வளவோ மந்திரங்கள் மறைந்துபோயின என்பது வெளியாகிறது. ... பத்ஞ்ச்சலி மகாபாஷியத்தால் தெரிய வருகிறது“

பக்கம் 6 ல் ; வேதங்கள் நான்கு பற்றி ;

ருக் வேதம், யஜுஸ் வேதம், சாம வேதம், அதர்வ வேதம். ஒவ்வொரு வேதத்திலும் மூன்று பிரிவுகள் உண்டு. அடுத்து, சூஹிதை என்பதில் யக்ஞங்கள், கருமங்கள், மந்திரங்கள் ; பிராமணங்களில் யக்ஞ விதிகள், ஸ்துதிலும் உண்டு. கிரியைகளையும் விவரிக்கிறது. உபநிசத்துகள் இதில் சாத்திரங்கள் - பிரம்ம வித்தைகள் பல,மொத்தம் 108. இவை ஆசாரியர்களால் செய்யப்பட்டுள்ளது. நான்கு வேதத்தில் மந்திரங்கள், சுலோகங்கள், அசுவமேத யாகம் கானம் இவை உள்ளன. தங்களின் வாழ்க்கை முறையில் அமைத்த " நால் வருணங்களை " பற்றி சொல்லுகிறார்கள்.

பக்கம் 11 ;

" .. மேற்கண்ட சுருதிகளின் ஆதாரத்தின் மேல் வைதிக தருமம் ( வேத சமயம்) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வேதங்கள் காயத்திரியில் அடங்கியன. காயத்திரி பிரணவத்தில் அடங்கியது. பிரணவமோ பரப்பிரம்மத்தின் விகாசம்.

அடுத்து; பக்கம் 12 ல் ;

சுருதிக்கு பின் ஸ்மிருதி பிரமாணம்.

ஆரிய ஜாதியையும், வருணம், குலம், ஆசாரம் இவை பற்றிய, விவஸ்தகளை பற்றிய நூல்களுமாம். வேதகங்களில் போலவே ஸ்மிருதிகளிலும் கால ரீதிகளுக்கு ஏற்ப அவர்கள் அவசியமான.. விதிகளை ஏற்படுத்தியும், பழைய விதிகளில் சிலவற்றைப் பொருத்தமானபடி இரந்தும் வந்திருக்கிறார்கள்.

பக்கம் 13 ல்;

ஆரிய வம்ஸத்தார்களின் பூர்வீக தரும சாஸ்திர கர்த்தாவாகிய மனுவானவர் ...." தரும சாஸ்திரம் செய்தாரென்று நாரத ஸ்மிருதியில் சொல்லிருக்கிறது.

ஸ்மிருதியில் ; வர்ணாச்சிரம தருமங்கள், புசிக்கக் கூடிய வஸ்துக்கள், தானம், பலிகள், கிரியைகள், இராஜ தர்மங்கள், விவகாரம், நியாயஸ்தலத்தில் நீதி செலுத்தும் முறை, குற்றங்கள், தண்டனைகள், இதற்கான விதிகள், பிராயச்சித்தம், ஆபத்தான காலத்தில் தருமங்கள், சரீர தருமங்கள் மற்றும் நான்கு ஆச்சிரம வாழ்க்கைகள் இவை விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த பிராமணம்;

இதிகாசங்கள் மற்றும் புராணங்கள்

இராமாயணம், மகாபாரதம் இந்த இரு இதிகாசங்கள் நான்கு வேதங்களின் விதிகளை நிலை நிறுத்த வந்தவை. இதை ஸ்ரீ மத் சங்கராசாரியர் ஐந்தாவது வேதம் என்கிறார். (பக்கம் 16).

புராணங்கள், முக்கியமானவை பதினெட்டு உபபுராணங்களும் பதினெட்டு உள்ளது

அடுத்து; பக்கம் 22;

ஆரிய கிரந்தங்களுக்குள் சிரோரத் தினமாய் விளங்குவது “பகவத் கீதை.“

அடுத்து;

பிராகிருத சாஸ்திரம், தத்துவ சாத்திரம் உள்ளது.

பக்கம் 25 ல்;

இலக்கணம், சோதிடம், யோக சாத்திரம், சமாதி பற்றி சொல்லப் பட்டுள்ளது. அடுத்து மீமாம்ஸ சாத்திரம் வருகிறது, இந்த சாத்திரத்திலும் வேதந்தான் பிரமாணம் என்றும் வருகிறது பக்கம் 34 பார்க்க.

அடுத்து;

பிரபலமாகிய உத்தர மீமாம்சையாகிய வேதாந்த தர்சனமானது பிரம்ம சூத்திரர், அவர் வியாசர் ஆவார். பின்பு மகான் சங்கரின் அத்வைதம்,இராமனுஜரின் விசிட்டாத்வைதம், மத்துவரின் துவைதம் வருகிறது. இதை அவர்கள் சமரசம் என்கிறார்கள் ( பக்கம் 40 )

அடுத்து, சாங்கியம், கர்மம், மாயை

ஜீவர்கள் இதை வரிசை படுத்துவது யாதெனில்;

ஓசதிகள், ஜீவராசிகள், மனுஷன், தேவர்கள், ஈஸுவரன் ஆவார்கள்.

கடவுள் வஸ்து;

சுருதி ஒன்றே, இரண்டல்ல இவ்விதம் சுருதிகள் முறையீடுகின்றன. சிருட்டிக்கு முன் ஒன்றே, பின், கிரியையால் ஐந்து தத்துவங்களில்; ஏகம், ஈஸுவரன் , பிரத்தியகாத்மா , அகம்பிரத்தியம் , சத்தாக,, மூலபிரகிருதி,அநாத்தமா,விசய ரூபி மாயை,சக்தி,இச்சை, சீவகோடிகள் என வருகிறது. ஒழுகும் முறைகள், சத்து, சித்து, ஆனந்தம் என்கிறது. பத்து மகரிஷிகள் உள்ளனர்.அடுத்து ஊழ்வினைகள்,

அடுத்து; யக்ஞங்கள் ( யாகங்கள் / வேள்விகள் ) ஐந்து ஆகும். வேதங்களுக்கு,தேவதைகளுக்கு, பிதுர்க்களுக்கு,பூதங்களுக்கு,மனிதர்க்கு செய்யும் யக்ஞம் என ஐந்து, மற்ற உயிர்களை பலியிட்டு அக்கினி யாகம் இங்கு உண்டு ( பக்கம் 236 )

அடுத்து, லிங்கம், விக்கிரக வழிபாடு, விஸ்ணு மூர்த்தி என்ற விக்கிரக வழிபாட்டு கொள்கைகள் சொல்லப்படுகிறது.

பக்கம் 323 ல்; நான்கு வருணாச்சிரம வாழ்க்கை பற்றி;

“இவ்விதமாக தத்தம் (வருண) நிலைமை மாறி மனிதர்கள் நடப்பார்களாகில் ஜனசமூகதினுடையவும், தேசத்தினுடையவும் நேர்மை கெட்டு சேமக்குறைவு சம்பவிக்கும்...”

ஒவ்வொரு ஜாதியின் தொழில்களை மனு மிகத் தெளிவாய் சொல்லுகிறார்.

பகவத் கீதையில்; “ ஓ அர்ஜுனா, பிராமணர்கள், சத்திரியர்கள், வைசிர்யர்கள், சூத்திரர்கள், இவர்களுக்குப் பூர்வகர்ம செஷ்த்தினாளுன்டான சத்துவாதி குணங்களால், கருமங்கள், தனித்தனியாய் வகுத்து சொல்லப்பட்டிருக்கின்றன.

இதில் பிராமணருக்கான தொழில்கள்;

வேதம் கற்பித்தல், அத்திய்யனம் கற்றல், பிறருக்கு எக்ஞும் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்குதல் இவையே. வேதாத்தியனம் செய்யாமல் வேறு தொழில்களை செய்கிற பிராமணன் தானும் தன் சந்ததிகளும் ஒருங்கே இந்த ஜென்மத்திலேயே சூத்திரனாகிறான். தத்தம் ஒழுக்கத்தால் சூத்திரன் பிராமணனாவான். பிராமணாள் சூத்திரனாவான். இந்த விதியே சூத்திரயனுக்கும் வைசியனுக்கும் என்று அறி என்கிறது சனாதனம். (பக்கங்கள் 288 - 295)

இதற்கு காட்டப்பட்டுள்ள உதாரணம்; விசுவாமித்திரர், சத்திரியர் இவர் பிராமணனாக ஆனார். இராமாயணத்தில் கார்க்கியர், திரியாருணி,கவி,புஸ்கராருணி, இவர்கள் சத்திரியர்களாகவிருந்து, பின் பிராமணர்களாக ஆனார்கள். முத்கலரும் சூத்திரியர், இவர் பிரமாணராக மாறினார் என்று உள்ளது.

ஆனால்

அதே சனாதன தர்ம நூலில்

வசிஷ்ட ஸ்கிருதி பக்கம் 293 ல்; ஒரு மேல் வருணத்தினின்று கீழான வருணத்திற்கு தன் நடத்தையால் ஒருவன் போகிறான் என்றால், மறு ஜன்மத்தில் கீழான வருணத்தில் ஜனிக்கிறார் என்று பொருள். அவ்வாறே மேல் வருனத்திற்குப் போகிறான் என்றதற்கு அர்த்தம்.

பக்கம் 292;

“...(இந்த ஜென்மத்திலேயே) வருண மாற்றங்கள் சிறுபான்மையாக இருந்ததது. நல்லொழுக்கத்தினால் ஒருவன் அதின் பலானாக, மறு ஜென்மத்தில் உயர்ந்த வகுப்பில் பிறப்பான் என்றது தான் சாதாரண கொள்கை.” .

புராணங்களில் தான் தொழில்கள் அடிப்படையில் வருண சாதி கொடுக்கப்பாட்டுள்ளது என சிலராய் உதாரணமாக தரப்பட்டுள்ளது காண்க. ஆனால், தொழில் அறிவு அதாவது வேதம் முறைப்படி கற்றுக்கொண்டவர்களை பூசைகள் செய்ய இன்று அனுமதிக்கவில்லையே

என்றால் வருணம் பிறப்பின் அடிப்படையில் தான் என்பது தானே.இதற்கு (வாதத்தில்) இவர்கள் தங்களின் மனு, ஸ்ருதி, சனாதன தர்மத்தை தான் வைத்தார்கள். நீதிமன்ற உத்தரவில் தான் நியாயம் பெறப்பட்டது என அறிக.

மொத்தத்தில் ; சனாதனத்தில் இருப்பவை;

சுருதி

ஸ்மிருதி

இதிகாசம்

புராணங்கள்

இவை மூலம் பிறப்பு, குணங்கள் மற்றும் நான்கு வருணம், வாழ்வில் நான்கு ஆச்சிரமம், பல ஆசாரங்கள், அண்ட மற்றும் பிண்ட தத்துவங்கள், மற்ற உயிர்களை யாகத்தில் பலியிடுதல், இன ஒழுக்கங்கள், வருண அடிப்படையில் தண்டனைகள், உடை, இருப்பு, தோல் ஆசனம், உணவு அதிகாரம், தண்டனைகள், கோயிலில் பொட்டு சதி முறை, ஹோமம், தானங்கள், காணிக்கை வழிபாடு, தேகசுத்தி, இடசுத்தி என எல்லாவற்றையும் ஆரிய இனத்திற்கான தனி தர்மம் மற்றும் ஆரோக்கியமான ஆலோசனைகள் சொல்லப்பட்டுள்ளது.

நிற்க !

மற்ற விசயங்கள் அண்ட பிண்டம் பற்றியும், இறை நிலைகள் பற்றியும் மேலும் மனித வாழ்க்கை பற்றி வியம்பி, கடைப்பிடிக்க வேண்டியதை சொல்லி, செய்யப்பட வேண்டிய கிரியைகள் பற்றியும், யோகங்கள். யாகங்கள், ஞானம் பற்றியும், மொத்தத்தில் முடிந்த வரை அனைத்து பற்றியும் இந்த சனாதன தர்மத்தில் சொல்லப்பட்டுள்ளது. சனாதன தர்மம் மிக திறமையான ஆழமான நூல் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது எனலாம்.

நிற்க!

தன் இனத்திற்கான பிரோயஜனம் இதை கருத்தில் கொண்டு இயற்றுவதுபொதுவான இயற்கையே. இது ஒரு அரசியல் அரசாட்சி பார்வையில் சரியே.

மற்ற சமய தர்மங்களுடன் பிரச்சனை எற்படுத்திக் கொள்ளக் கூடாது என்ற நல்ல அறிவுரை கூறினாலும், அதே நேரத்தில் தனது ஆரிய இன உயர்வை நிலை நிறுத்தி, அதிகாரத்தில் என்றும் நிலைத்திருக்கும் வகையில், அதற்கு வேண்டிய விதிகளை, வர்ண ஆச்சிரமங்களை, ஆசாரங்களை,இத் தர்ம நூலில் ஏற்படுத்தி உள்ளது என்பது வெட்ட வெளிச்சமாக உள்ளது.

தன் இன / குல பிரயோசனத்தை மேன்மையை நிலை நிறுத்திக் கொள்ள ஒரு தர்மத்தை (நூல்) ஏற்படுத்திக் கொள்வது உலகில் எல்லா நாட்டிலும் தான் உள்ளது. அந்த பார்வையில் சனாதன தர்மம் என்பது ஆரிய இனத்திற்கு அவர்களுக்காக, என்றும் நிலைத்திருக்கும், மேன்மையான, புனித வேதங்களாக உள்ளது. ஆனால் இத்தகைய ஒரு சாரார்க்கு உள்ள தர்மத்தை எதிர்க்கும் போராட்டமும் வரும்.

உ.ம் : வேதம் பயின்றவர்களும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற கோரிக்கையை சொல்லலாம். ஆனால் அவர்கள் வாதத்தில் இது பிறப்பின் தர்மம் மற்றும் ல்ருதி  ஆகம வேதம் மந்திரங்கள் ஓதுவது மற்றவர்களுக்கு தொழில் ஆகாது என்றனர்.

வேறு இன தர்மத்தில் அல்லது பொது நெறியில் சொல்லப்பட்டுள்ள மேம்பட்ட வழியை, / விதியை நூலில் காட்டி உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் அந்த கருத்தை தன் நூலில் இரந்து கொண்டு, இவை ஏற்கனவே வேதங்களில் சொல்லப்பட்டவையே என்று பொய்யுரைத்து மேம்படுத்தி கொள்வது ஏற்புடையது ஆகாது.

இதன் அடிப்படையில் தான் சனாதனம் என்றும் காலத்தால் முந்தியதும் என்றும் அது என்றும் நிலைத்து இருப்பது எனப் பறைசாற்றுகிறார்கள்.

உ.ம் : ஜீவகாருண்யம் வேதத்தில் ஏற்கனவே சொல்லப்பட்டவை என இத்தர்மத்தில் வியம்பினாலும், ஆரியர்களின் ஆகாரம் புலால் உணவு ஆகும். இது “புஜிக்கக்கூடிய வஸ்துக்கள்” என்ற பகுதியிலும் மற்றும் அசுவமேத யாகம் மூலம் உறுதியாகியுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தொல் காப்பியம், திருக்குறள் இவையில்  புலால் உண்ணாமை வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆக, இரக்கக் கோட்பாட்டில் ஸ்ருதிவேதத்தை விட இங்குள்ளவர்கள் சிந்தித்து உள்ளதை மறுக்க முடியாது.  பவுத்த மதத்திலும் மற்ற உயிர் இரக்கப் போதனை உள்ளது.

இதுவே முக்கிய இடம். இவர்கள் இப்படி செய்வதற்கான காரணம் எதுவெனில்;

அதாவது என்றும் தங்கள் வேதங்களும் தர்மமும் மேன்மை எனும் போது, அதிகார இடத்தில் வருவது சுலபம் மற்றும் மக்களில் அதிக சதவிதத்தில் உள்ள அறியாமை மற்றும் உழைப்பாளர்களின் செல்வம், உழைப்பு, பணிய வைத்தல், மரியாதை பெறுதல் இன்னும் பலசௌகரியம் இவை எல்லாம் இவர்களுக்கு பயன்படுத்தி கொள்ளும் வாய்ப்பு வருகிறது. இதுவே ஆதிக்க அமைப்பு மற்றும் தர்மத்தின் நோக்கம் எனலாம்.

நிற்க!

இந்த உண்மை தெரியாது, அதில் உள்ள மற்ற தத்துவ உண்மைகள் மட்டும் கண்டு இதை பாராட்டுவது, அதை ஏற்றுக்கொள்வது அறியாமையே ஆகும். அதாவது அண்டங்கள் பற்றி மற்றும் மனித உடல்கள் பற்றி, குணம் பற்றி, உடல் உறுப்புகள் தத்துவங்கள் பற்றி, சுத்தம் பற்றி ஒழுக்கம் பற்றி தரும முறைகள் பற்றி, ஆன்மா பற்றி, புண்ணியம் பற்றி இன்னும் பொதுவான பல விசயங்களில் ஆழ்ந்த அறிவும் நல்விசாரத் தன்மையை சனாதன தர்மம் கொண்டுள்ளது.ஆனால், இதை மட்டும் கண்டு, இதன் முதன்மை நோக்கமான ஆரிய இனபலனே என்பதை அறியாது விடுதல் வேதனையே. வருணங்கள் ஆச்சிரம வாழ்க்கை மற்றும் ஆசாரங்களில் ஆரியர்கள் தனது ஆதிக்கம் செலுத்தி மற்றவர்களை தாழ்மை படுத்தி உள்ளதை அறியாது விடுதல் இதுவும் வேதனையே.

பாவம் புண்ணியம் மற்றும் கருமம் வினை, சாபம், குற்றம் என பல சொல்லி பயம் ஏற்படுத்தி, தர்மத்தை மீறுபவர்களுக்கான தண்டனையை அவர்களின் வருண அடிப்படையில் கொடுக்கப்படும் என மற்றவர்களிடத்தில் பயத்தை உருவாக்கியுள்ளது எனலாம் அல்லது இதன் ஆசாரங்களில் நம்பிக்கை கொள்வதினாலும் இத் தர்மத்தை மற்றவர்கள் ஏற்கின்றனர் எனலாம்.

மீண்டும் ஆய்வின் முடிவு ஒருவாறு;

சனாதன தர்மம் போல் பல தர்மங்கள் எல்லா நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த அல்லது தனது இனத்தை வழி நடத்த விதிகள்/ தர்மம் வகுக்கப்பட்டு உள்ளது.

சனாதன தர்மம் என்பது ஸ்ருதியை ( நான்கு வேதங்கள் ) அடிப்படையாக கொண்டு ஆரிய இனத்தின் பிரயோஜனத்திற்கு வடிவமைக்கப்பட்ட நூல் ஆகும்.

சனாதன தர்ம நூல் ; நேரிடையான நூல் அல்ல. பிரதானமாக சுருதி அடிப்படையில் தான் இது அமைக்கப்பட்டது.

மற்ற மார்க்க நெறியையும் எடுத்து காட்டப்பட்டுள்ளது. காலத்திற்கு ஏற்றாற்போல் சுருதியை மறைத்தும் வெளிப்படுத்தியும் உசிதமாக அனுஷ்டிக்கப் படக்கூடிய தன்மையிலும், இத்தகைய மாற்றம் சனாதன தர்மத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மற்ற புதிய நெறியை போற்றியும் அதே நேரத்தில் சொல்லப்பட்ட நெறியை தன்னிடம் இரந்துக் கொண்டு அது ஏற்கனவே தங்கள் வேதங்கள் அல்லது ஸ்ருமிதியில் உள்ளவை என வியம்பி உள்ளது.

வருணங்கள் மற்றும் வருணங்களுக்கு உரிய குணாதிசயங்கள் ஸ்ரீ கிருஷ்னர் சொல்லியுள்ளதாக கொண்டாலும், மேற்படி வர்ணங்கள் விசுஸிக்க ஒரு தனி மாதிரியான சனசமூக முறைமையை ஸ்ரீ மனு தான் அமைத்து

ஸ்தாபித்துள்ளார் என்று அவர்கள் தர்மத்தில் சொல்லியிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

தர்மத்தை மீறுவது குற்றம், மீறுபவர்களுக்கான  தண்டனையை சுருதி வகுத்துள்ளது. வருணத்திற்கு ஏற்றாற் போல் ஆடை, ஆகாரம், இடம், தண்டனை இவை மூலம் அது தன் ஆதிக்கத்தையே உறுதி செய்கிறது .

வருணங்கள் தொழிலின் அடிப்படையில் என்றாலும், பல இடங்களில் பரம்பரை, பிறப்பு, சந்ததியர் என்பதின் மூலம் வருணம் பிறப்பின் அடிப்படையிலே என உறுதியாகிறது.

அடுத்து, நான்கு ஆச்சிரம வாழ்க்கையை கட்டாயப்படுத்துகிறது . இதை மீறுபவர்களுக்கு அதன் விளைவுகளை/ தண்டனையை பட்டியலிட்டு சொல்லுவதின் மூலம் ஆதிக்க சக்தி உறுதியாகிறது.

வேதங்களை நிலை நாட்ட வந்தவை தான் இதிகாசங்களாகிய இராமாயணம் , மகாபாரதம் ஆகும். இதில் வரும் அவதாரங்கள் புலால் உணவு சாப்பிடும் பழக்கமும், போரிடுதல் தீர்வாகவும் காட்டியுள்ளது மூலம் அன்பு இரக்கக் கோட்பாடு, ஜீவகாருண்யம் வேதத்தில் கொள்கையாக்கப் படவில்லை எனலாம் .

ஆசாரங்கள் கட்டளையாக்கப்பட்டுள்ளது. ஆசார வகையில் சாதி அமைப்பு முறை, குல ஆசாரம், மரபு ஆசாரம் , ஆசிரம ஆசாரம் , லோக ஆசாரம் , அந்த ஆசாரம், கலை ஆசாரம் கிரியா ஆசாரம் , தேச ஆசாரம், சாதன ஆசாரம், சமய,மத ஆசாரம், மற்றும் சாத்திர ஆசாரம் இங்கு உறுதியாக சொல்லப்பட்டுள்ளது.

பல்லாயிர ஆண்டுகளுக்கு முன், அக்காலத்தில் மனித நாகரிகம் இப்படி இருப்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அக்கால பண்பாட்டில் வணங்கிய கடவுள் கொள்கையை இன்றும் நிலை நாட்ட முயற்சிப்பதில் என்ன நியாயமுள்ளது..

கடவுள் கொள்கையில் பல முரண்பாடுகளை கொண்டு உள்ளது. ஆரம்பத்தில் சுருதியில் ஒன்று எனவும் அதன் பின்பு வந்த அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் இவை சுருதியின் கொள்கையில் மாறுபடுகிறது..

இதனால் வரும் சந்தேகங்கள்;

புதிய கருத்துக்களை ஏற்று அதை தனதாக்கி கொள்வதை விட, புதிய கொள்கைக்கு அவர்கள் மாறலாமே! ஏன் புதிய பொது நெறியை ஏற்க மறுக்கிறார்கள்.

இந்து என்பது எவர் ஒருவர் கிறிஸ்து இல்லையோ , எவர் ஒருவர் இஸ்ஸாம் இல்லையோ , எவர் ஒருவர் பார்சி இல்லையோ அவர்

அனைவரும் இந்து எனப்படுவர். ஆக, இந்த இந்திய நாட்டில் மேற்படி சொல்லப்பட்ட மார்க்கங்கள் தவிர, உள்ள சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் அவற்றின் கடவுளர், ஆசாரங்கள் இவை நூறுக்கும் மேல் உள்ளது. இவர்களும் சட்டப்படி இந்துக்களே.

ஆனால் இன்று ஒரு குறிப்பிட்ட கடவுளரே இதிகாச புராணக் கடவுளர் ஸ்ரீ இராமர், ஸ்ரீ கிருஷ்ணர் இவர்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதை காணலாம். வேதம் மட்டும் இந்து என்பதில் என்ன நியாயம் உள்ளது.

இந்துக்கள் என எல்லோரையும் ஒன்றாக அழைத்தாலும் வருண அடிப்படையில், தெய்வங்கள் இருக்குமிடத்திற்கு எல்லோரையும் செல்ல அனுபதிப்பதில்லை. ஆனால், வருண தொழில் அடிப்படையில் இல்லாமல் (வேதம் சொல்லுவதே தொழிலாக கொண்ட பிராமண ஆரியர்கள்) இவர்கள் மற்றத் தொழில்களை செய்தாலும், அவர்கள் எல்லோரும் கோயிலில் உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். ஆக, வருணம் பிறப்பின் அடிப்படையில் தான் என்பது உறுதியாகிறது.

வைதீக மதம் (வேத ஆகமம்). எப்படி தன்னை இந்து என்ற பெயருக்கு முழுமையாக கொண்டாடுகிறது. தன் கடவுளை நம்பாத ஒருவன் எப்படி எல்லா கடவுளையும் துவேசித்தார் என எப்படி சொல்ல முடியும்..

வேத ஆகமம் ஆகிய ஆரிய மார்க்கம் தன்னை இந்து என அழைப்பதால், மற்ற சமய, மத மார்க்கங்கள் இனி தனது பெயரை குறிப்பிட்டே அழைக்க வேண்டும் போலும், ( உ.ம் : இனி சைவ சமயம், வைணவ சமயம், சீக்கிய மதம், நாராயண குரு, சுத்த சன்மார்க்கம் .. என தங்களை அழைத்துக் கொள்வதே சரியாகும்.)

வருண ஜாதியில் எவர் ஒருவரையும் இன்று வைசியர், சத்திரியர், சூத்திரர்கள் என அழைப்பதில்லை. ஆனால் அந்த ஜாதி அமைப்பில் உயர் வருணமாகிய பிராமணர் என்ற பெயர் மட்டும் இன்றும் அழைக்கப் பட்டு வருகிறது.

முடிபாக; இதை;

- ஆரிய இனப்பார்வையில் பார்த்தால் இத்தர்மம் அந்த இனத்திற்கான மிக பிரயோசனமான தர்மமே ஆகும். அவர்கள் இது நிலைத்திருக்க வேண்டிய நூல் என்பர்.
- மற்ற இனப் பார்வையிலிருந்தது பார்த்தால் அல்லது மனித நல பொது நோக்கப் பார்வையிலிருந்து பார்த்தால், இந்த தர்ம நூல் ஒழிக்கப்படக்கூடிய ஒன்று என்பர்.
- விவேகானந்தர், பாரதி, பெரியார், அண்ணா, காமராஜர் உட்பட தலைவர்களின் பார்வையில் இருந்து பார்த்தால் இது போன்ற தருமங்கள் கூடாது என்றும் இது பொது மக்களுக்கு உகந்தது அல்ல என்கிறார்கள்.

- உலக உயிர்களை ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையில் பார்க்கும் தொல்காப்பியர், ஔவையார், வள்ளுவர், வள்ளலார் இவர்களின் பார்வையில் இத்தருமத்தை கைவிட்டால்தான் பொதுநோக்கம் வருவித்துக் கொள்ள முடியும் என்கிறார்கள்.

இவ்வளவு தான். இந்த உண்மையை, அறிவால் விசாரம் செய்தால் மட்டுமே அறிய முடியும். இந்த உண்மை அறியாது அங்கு இருப்பவர்களுக்காக பரிதாபப்படலாம். அவர்களுக்காக மற்றும் மற்ற எல்லோருக்குமாக முன் வந்து போராடுபவர்களின் செயல் பாராட்டுக்குரியது எனலாம்.

வள்ளலார் சொல்கிறார்கள் ;

பொது நோக்கம் ஏற்படாவிட்டால் “ கருணை “ யாகிய அன்பு, அறிவு, இரக்கம் நம்மிடையே விருத்தியாகாமல் போகிறது. கருணை என்பது கடவுளின் அருளை பெற்று தரக்கூடிய ஒரே சாதனம் ஆகும். கடவுள் என்பவர் இயற்கை உண்மை, இயற்கை விளக்கம், இயற்கை இன்பமாகிய “ தனிப்பெருங்கருணை “ ஆவார், அவர் நிலையை, எவர் ஒருவர் உள்ளது உள்ளபடி காண்கிறார்களோ அவர்களுக்கு அவர் அருளாகிய பேரின்ப பெருவாழ்வு கிட்டும். இது சத்தியம் இது சத்தியம் என்று சொல்கிறார் திருவருட்பிரகாச வள்ளலார்.

### நிற்க! வரலாற்று உண்மை அடிப்படையில் மேற்படி ஆய்வு மேற்கொண்டாலும், உண்மையில், மனிதன் உட்பட படைக்கப்பட்ட அனைத்துமே கடவுளின் அம்சமே என்ற உண்மை அடிப்படையில் நாம் எல்லாரும் ஒன்றே எனப்பார்க்க வேண்டும்.

பிறர் குற்றம் விசாரியாதிருதல் மற்றும் தன்னை மதியாதிருத்தல்

என்ற வள்ளலாரின் சத்திய வாக்கியம் நினவுக்கொள்வோம். மேலும், வள்ளலார் உபதேசிக்கும் போது கீழ்வருமாறு சொல்கிறார்கள்;

“ கூச்சலும் குழப்பங்களும் பக்குவம் வருவிப்பதற்கே ...” என்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய திருவருட்பிரகாச வள்ளலாரின் உண்மை பொது நெறியாம் சுத்த சன்மார்க்க நெறியை நாம் ஒவ்வொருவரும் தெரிந்து அறிந்து அனுபவிக்க வேணுமாய் எல்லோரையும் வேண்டுகிறேன். :

## வள்ளலாரின் சுத்த சன்மார்க்க உண்மைப் பொது நெறி ##

சத்திய அறிவால் அறியப்படுகின்ற ஓர் உண்மை கடவுள் உண்டு.

நாத்திகம் சொல்கின்றவர்தம் நாக்கு முடை நாக்கு என்றவர்.

சுத்த சன்மார்க்க தனி நெறியை சுருங்க பார்ப்போம் :

"...எல்லா அண்டங்களையும் எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் எல்லா பொருள்களையும், மற்றை எல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கம் செய்வித்தும்,துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும், எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும் உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்தல் ..."

கடவுளின் அருளை பெற கருணை ஒன்றே சாதனம். அக்கருணை விருத்திக்கு தடையாக சாதி கட்டுப்பாட்டு ஆசாரங்களும் சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களும் உள்ளன. சாத்திர ஆசாரம் உட்பட பதிமூன்று ஆசார வகைகள் என பட்டியலிட்டு தந்துள்ளார் வள்ளலார். ஆகையால் மேற்படி ஆசாரங்கள் விட்டு ஒழித்து பொது நோக்கம் வருவித்து, கடவுளின் அருளை பெற வேண்டும்.

கடவுளால் வள்ளலாருக்கு அறிவிக்கப்பட்ட மரபுகள் நான்கு. அதில் ஒன்று சாகாக்  கல்வியே கல்வி என்கிறார். ஆம், மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை நீக்கி கொண்டு, கடவுள் அருளால் இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு பேரின்ப பெருவாழ்வில் வாழுதலே தனது அதி தீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது என்கிறார் வள்ளலார். ..."

கடவுள் நம்பிக்கை கொண்ட வள்ளலார்தான் கீழ் வருமாறு சொல்கிறார்கள்:-

(பக்கம்: 466 ல்): " .. நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம்...."

(அதற்கான காரணங்களை விவரித்தும் வள்ளலார் சொல்லி உள்ளார்கள்.)

மேலும் பக்கம் 468 ல்; " வேதாந்தம் .. முதலிய மதங்களில் லட்சியம் வேண்டாம்... "

பக்கம் 471 ல்; "சமயம் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி, சித்தாந்தி என்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மை அறியாது சமயவாதிகளைப் போலவே ஒன்றுக் கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆதலால் நீங்கள் அஃது ஒன்றையும் நம்ப வேண்டாம்..."

பக்கம் 418 ல்;

"தத்துவவொழுக்கம் பற்றி சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் ஒழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.  தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்.

அவையாவன;

ஜாதி ஆசாரம், குல ஆசாரம், அச்சிரம் ஆசாரம், லோக ஆசாரம், தேச ஆசாரம், கிரியா ஆசாரம்,சமய ஆசாரம்,மத ஆசாரம், மரபு ஆசாரம், கல ஆசாரம், சாதன ஆசாரம், அந்த ஆசாரம், சாஸ்திர ஆசாரம், முதலிய ஆசாரங்கள்.

ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய மெய்ஞ் ஞான ஆசாரத்தை வழங்கிப் பொதுநோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி வல்லபங்களைப் பெற முடியும். இல்லாவிடில் முடியாது என்கிறார் வள்ளலார்.

30-01-1874 அன்று திருக்கதவு திருக்காப்பிடுவதற்கு முந்தின இரவில் வள்ளலார் சொல்லியது;

“இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சுத்த சன்மார்க்க ஒழுக்கம் (நெறி) இன்ன தென்று தெரிந்து கொள்ளவில்லை. யாதெனில்; இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை “ என்றார் வள்ளலார்.

முதல் விண்ணப்பத்தில்;

“ எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள்,மதங்கள்,மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப வி கற்பங்கங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலக ஆசார சங்கற்ப வி கற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும்..“

இரண்டாவது விண்ணப்பத்தில்;

“ ... அவ்வ சமயங்களில் பலப்பட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகள் என்றும் உள்ளபடியே எனக்கு அறிவித்து அச்சமய ஆசாரங்களை சிறிதும் அனுட்டியாமல் அடைசெய்வித்து அருளினீர் .. ஆண்டவரே!”

12 - 04 -1871 அறிவிப்பில்;

“... இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாக சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர்,அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா

கடவுளரும்,எல்லா தலைவர்களும், எல்லா கடவுளரும், எல்லா தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமை பெரும்பதி....”

பாடல்களில்;

“ நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா நவின்ற கலை சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே ..”

“ மேல் வருணம் தோல்வருணம் கண்டறிவார் இல்லை நீ..”

“ இயல் வேத ஆகமங்கள் புராணங்கள் இதிகாசம் இவை முதலா இந்திர சாலங்கடையா உரைப்பார் ...மகனே நீ நூல் அனைத்தும் சாலம் என அறிக..”

“ தோன்றிய வேத ஆகமத்தை சாலம் என உரைத்தேம், உலகறி வேத ஆகமத்தை பொய் எனக் கண்டுனர்வாய் “

பாடல் எண்: 166 வேத நெறி, ஆகமத்தின் நெறி, புராணங்கள் விளம்பும் நெறி, இதிகாசங்கள் விதித்த நெறி ... முழுவதும் சூது

பாடல் எண்: 496 மதங்கள் ஆசிரம வழக்கெலாம் குழிக் கொட்டி மண் மூடிப் போட்டு ..”

பாடல் எண்: 72 & 363 சாத்திரக் குப்பை, சாத்திர சேறு என்கிறார் வள்ளலார்.

பாடல் எண்: 187 புராணங்கள் இதிகாசங்கள் உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண் மூடி வழக்கம் எலாம் மண்மூடிப் போக.

பாடல் எண் : 689 மதத்திலே மயங்கா மத்தியிலே விளைந்த மருந்தை...”

ஆம்,

திருவருட்பிரகாச வள்ளலார் ஆரம்ப காலத்தில் தான் பிறந்த குடும்பம் சார்ந்திருந்த சைவ சமயத்தை தழுவி, அச்சமயத்தில் பற்றுக்கொண்டு சமய ஸ்தோத்திரப் பாடல்களை பல பாடியுள்ளார்கள். உலக சமய மத மார்க்கங்கள் உண்மை கடவுளின் நிலையை உள்ளது உள்ளபடி உரைக்கவில்லை என்கிறார் வள்ளலார்.

அதன் பின்பு, மரணம் உட்பட எல்லா அவத்தைகளையும் நீக்கிக் கொண்டு, கடவுள் அருளால் சாகா வரம் பெற்று பேரின்ப பெருவாழ்வில் வாழ வேண்டும் என்பதே வள்ளலாரிடம் தனி அதி தீவிர விருப்பம் ஏற்பட்டது.

இவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வழியை உலகத்தில் உள்ள சமய மத மார்க்கங்களில் தேடி பார்த்தார்கள். எந்தொரு வழித் துறையும்

தென்படவில்லை. ஆனால் இது குறித்து திருவள்ளுவர் தனது ஞான வெட்டியானில் சொல்லி உள்ளதாக வள்ளலார் குறிப்பிடுகிறார்.

தனது அக விசாரணையில் ஆண்டவர் தெரிவித்து, தான் தெரிந்துக் கொண்டதாக வள்ளலார் சொல்கிறது யாதெனில்;

" ஒழுக்கம் நிரப்பிக்கொண்டு சத்திய அறிவால் அறியப்படுகின்ற ஒன்றேனும் ஒன்றாகிய உண்மை கடவுளை கருத்தில் கருதி தொடர்ந்து அகத்தில் கருணை நன்முயற்சியில் இருந்து, ஆண்டவரே நீரே விரைந்து வந்து எனக்கு உண்மை தெரிவிக்க வேணுமாய் பிரார்த்திக்க வேண்டும் என்கிறார்.

நம் அக உள்ளத்தில் தோன்றும் கடவுள் திருக்காட்சியை கண்டு, கடவுள் அருளால் பேரின்ப பெருவாழ்வில் வாழும் வரத்தை பெறலாம். நான் பெற்றேன். நீங்கள் யாவரும் பெறுவதற்கு யாதொரும் தடையுமில்லை.

இது சத்தியம் இது சத்தியம் என்கிறார் வள்ளலார்.

எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக சுத்த சன்மார்க்கம் விளங்குகிறது.

அனைவரும் வாரீர் .. வாரீர் என அழைக்கிறார் சுத்த ஞானி வள்ளலார்.

நன்றி, அன்புடன் – பணிவுடன் APJ அருள்

நல்ல விசாரணையே கடவுளை காணும் வழி. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!